
திருச்சிற்றம்பலம்

# சைவநெறிக்கூடம்
## அருள்மிகு
# ஞானலிங்கேஸ்வரர் ஆலயம்



ஞானகருணாகரப் பிள்ளையாரே போற்றி
ஞானாம்பிகை அருட்பதமே போற்றி
ஞானலிங்கப்பெருமானே கற்பகக்கனியே போற்றி
சிவஞானியர், சிவயோகியர், சித்தர்கள் அருட்பதம் போற்றி
சிவஞானசித்தர்பீடமே போற்றி போற்றி

## Hindugemeinde schweiz
## DER VEREIN SAIVANERIKOODAM


LAUBEGGSTRASSE. 21, 3006 BERN, SWITZERLAND
Tel: 078 645 30 42 / 079 275 68 62 / 076 437 48 96/ 031 302 09 56
www.saivanerikoodam.ch info@saivanerikoodam.ch facebook.com/saivanerikoodam



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவநெறிக்கூடம்

## HINDUGEMEINDE SCHWEIZ

**Der Verein SAIVANERIKOODAM**

www.saivanerikoodam.ch info@saivanerikoodam.ch facebook.com/saivanerikoodam




வரலாற்றில் மன்னர்காலம் முதல், இன்று நவீனகாலத்தில் ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள்வரை சைவசமயத்திற்குத் தொண்டும் செய்திருக்கிறார்கள், தொல்லையும் செய்திருக்கிறார்கள். இதன் பெறு பேறாக இன்று உலகில் எட்டுத்திசைகளிலும் ஏற்றத்திலும் இறக்கத் திலும் சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் ஈழத்தமிழ் மக்கள் பரந்து வாழ்கின்றோம். இப்படி சுவிஸ் நாட்டிற் புலம்பெயர்ந்து வாழும் 15 முதல் 23 வயதிற்குட்பட்ட ஐவரது திட்டமிடப்படாத சந்திப்பு 1994-1995 காலகட்டத்தில் ஒருமன்றத்தினைத் தோற்றுவித்திருந்தது.

சைவநெறிக்கூடத்தின் ஆரம்பச்செயற்பாடுகள் இளந்தமிழ்ச் சமூகத் தினர்க்கும், வெளிநாட்டவர்களுக்கும் எமது மார்க்கத்தினைக் கோட் பாட்டு ரீதியாகவும், செயற்பாட்டுவகையிலும் உயிரூட்டமாக விளக்கு வதுடன் எமது வேரைக்காத்து; சைவநெறியினைப் புலம்பெயர் தமிழ் மக்கள் ஒழுகக்கூடிய வகையிலும், அதேநேரம் எமது இளந் தமிழ்ச்சமூகம் விருப்புடன் தமது சுயவிருப்பில் ஆர்வத்துடன் ஒழுகக்கூடிய மார்க்கமாக எளிமையான ஊடகத்தினால் வெளிக் கொணரும் செயலிலும் ஈடுபட்டது.

ஒவ்வொருவரும் பலவகையில் வேறு பட்டிருந்தபோதும் ஒன்றிணைந்த நோக்கம் ஒன்றாக அமைந்திருந்தது. அது எமது சமயச் சுயதேடல் ஆகும். இத்தேடலின்பால் பல இறையருளா ளர்கள், சித்தர், யோகியர், ஞானியர், உறவுகள் கைகூடின. அன்றுமுதல் இன்றுவரை தொடர்ந்து சைவநெறிக் கூடத்தினை வழிநடாத்தப் பல சமயப் பெரியவர்களும், இறையருளாளர் களும் கருத்தொருமித்து அமைந்தது திருவருட் செயலாகும்.

தேடலின் கருவில் விளைந்த சைவ நெறிக்கூடம் தமிழ்மொழி, சைவ சமயம் எனும் இரண்டையும் புலம் பெயர் சூழலிற்கு அமைவாக ஒழுகக் கூடிய, வாழக்கூடிய மார்க்கமாக எமது இளந்தமிழ்ச் சமூகத்திற்கு அமைத்துக் கொடுக்கும் கடப்பாட்டினை நோக்கமாகக் கொண்டது.

சைவசமயத்தவர் காரணமின்றிச் சமயத்தினை வெளியில் இருந்து குறைகூறாது நேரடியாகச் செயலில் இறங்கிச் சமூகத்தவறுகளைத் திருத்தவேண்டும் எனும் மன உந்துதலில் குருவருள், இறை யருள், திருவருள் நிறைகூட மேற் கண்ட நோக்கத்துடன் சைவத் தமிழ்மன்றமாகச் சைவநெறிக் கூடம் இயங்க ஆரம்பித்தது.

தமிழ்மொழி - சைவசமயம் தொடர்பாக ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்கும் கேள்விகள் விடையளிக்கப்பட வேண்டும். வயது, பால் எனும் பாகுபாடுகளின்றி அனைவருக்கும் சமயம் தொடர்பான ஐயங்கள் தக்கவகையில் தீர்த்து வைக்கப்படவேண்டும் என்பதும் சைவநெறிக்கூடத்தின் நோக்கமாக அமைந்தது.

தர்மம் என்பது இயற்கைவிதி; எவரது விருப்பத்திற்கும் - வெறுப்பிற்கும் தர்மம் உட்படாது. அதுபோல, எமது சமயம் இயற்கையின் தர்மமாகும். தமிழ் நாயன்மார்கள் காட்டிய அன்புவழிச் சைவசமயத்தில், அருட்பிரகாச வள்ளலார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டிய சன்மார்க்கவழியில், சனாதனதர்மம் எனும் தர்மத்தின் பாதையில், சித்தர்கள் காட்டிய மேன்மைகொள் சைவநெறியில், ஆதிசங்கரரால் வகுக்கப்பட்ட 'இரண்டல்ல ஆத்மா ஒன்று' எனும் கொள்கையில்; சைவம், சாக்தம், வைஷ்ணவம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் எனும் ஆறு சமயங்களையும் ஏற்று, புலம்பெயர் சூழலிற்கு அமைவாக ஒழுகக்கூடிய மார்க்கமாக எமது அடுத்த பரம்பரைக்கு அமைத்துக்கொடுக்கும் பொறுப்பினைத் தூர இலக்காக்கிக் கொண்டது.

அதேநேரம் மனிதர்களாலே சமயத்திற்குள் புகுத்தப்பட்ட பிற்போக்குகளைக் களைந்து, செழுமைநெறி சீர்மிகு சைவசமயம் தமிழ்முறைப்படுத்தப்படவேண்டும் என்பது சைவநெறிக்கூடத்தின் இலக்காக, அதற்கான தேடல் ஆரம்பமானது. ■

# சைவநெறிக்கூடம்

## அருள்ஞானமிகு

# ஞானலிங்கேஸ்வரர் ஆலயம்

**LAUBEGGSTRASSE. 21, 3006 BERN, SWITZERLAND**

**Tel: 078 645 30 42 / 079 275 68 62 / 076 437 48 96/ 031 302 09 56**

**www.saivanerikoodam.ch info@saivanerikoodam.ch facebook.com/saivanerikoodam**

## அருள்ஞானமிகு ஞானாம்பிகை உடனுறை ஞானலிங்கேஸ்வரர் ஆலயம்



எமது நோக்கத்தினை அடையும்வகையிற் சமயக்குரவர்களைத் "தமிழிற் பாடுக" எனப் பணித்த தென்பாண்டி நாட்டான், என்நாட்டவற்கும் இறைவன், கங்கையைத் தலையில் தரித்த முதற்சங்கத் தமிழ்த் தலைவன் சிவ பெருமான்கருணை கைகூடிட; இறையருளாளர்கள், சித்தர், யோகியர், ஞானியர் ஆசியுடன் தமிழ்மக்கள் தமதுமொழியில் கருவறையில் வழிபடும் அருள்ஞானமிகு ஞானாம்பிகை உடனுறை ஞானலிங்கேஸ்வரர் ஆலயத்தினைச் சுவிஸ் தலைநகர் பேர்ண் மாநிலத்தில் அமைக்கக் கீழ்க்காணும் நிகழ்வு அடிக்கல்லாக அமைந்தது.

அன்றுமுதல் இன்றுவரை சைவநெறிக்கூடத்தினை வழிநடத்தப் பல சைவசமயப்பெரியவர்களும், இறையருளாளர்களும் அமைந்தது திருவருட்செயலாகும். இதன்வகையில் இலங்கையில் மௌனாச்சிரமம் அமைத்துச் சமயத் தொண்டாற்றிக்கொண்டிருக்கும் திருநிறை சத்குரு உமாசங்கர் அவர்கள், சைவநெறிக்கூடத்திற்கு ஒரு ஸ்படிகலிங்கத்தினை அருளினார். இப்பெரும் லிங்கம் திருநிறை உமாசங்கர் தனது குருவருளால் பெற்றதாகும். அவர் இப்பெருமானை ஈழத்தில் நிறுவுவதற்கே எண்ணியிருந்தார். இருப்பினும் புலம்பெயர் தமிழ்மக்களது வழிபாட்டின் அவசியத்தினை உணர்ந்தே பொதுவழிபாட்டிற்காகச் சைவநெறிக்கூடத்திடம் லிங்கநாதப் பெருமானைக் கையளித்தார். இப்பெருமானே ஞானாம்பிகைஉடனுறை ஞானலிங்கேஸ்வரராகச் சுவிஸ் பேர்ண் மாநிலத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கிறார். 'புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு, நீருண்டு' என்கின்ற திருமூலர் திருமந்திரத் திருவாக்கிற்கு அமைய, இப்புவியிற் பிறப்பெடுத்த உயிரிற்கெல்லாம் இறைவனை நேரடியாக வழிபட உரித்துண்டு என்கின்ற கோட்பாட்டின்பால் வர்க்கவேறுபாடு ஒழித்து அனைவரும் சமமெனும் அடிப்படையில் தமிழ்மக்கள் தாமே தமது கரங்களால் இறைவழிபாட்டினைக் கூட்டுவழிபாடாக நடாத்தும் ஆலயமாக இன்று சுவிஸில் அருள்ஞானமிகு ஞானாம்பிகை உடனுறை ஞானலிங்கேஸ்வரர் ஆலயம் தனித்தன்மையுடன் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிடேகம், ஆராதனை, யாகம், ஹோமம் முதல் அனைத்துக் கிரியைகளையும் சைவாகமமுறையில் அனைத்துச் சைவத் தமிழ்மக்களும் தாமே நேரில்நின்று ஆண், பெண் வர்க்கம் என்ற வேற்றுமை யற்று வழிபாடு செய்யும் உலகத்தின் முன்னுதாரண ஆலயமாக இது விளங்கு கின்றது. கலியுகத்திலும் இறையருள் இறங்கிவரும் என்பதை அருள்ஞானமிகு ஞானாம்பிகை உடனுறை ஞான லிங்கேஸ்வரர் ஆலயம் வரும் பக்தர்கள் தாமே நேரில் உணர்ந்த உதாரணங்கள் நிறையவுள்ளன. ஆலய அலங்கார உற்சவ காலத்திலும், திருவாதிரை, நவராத்திரி, கந்தசஷ்டி போன்ற விரத காலத்திலும் அடியவர்கள் பதிவு செய்த காணொளி, ஒளிப்பதிவுக் கருவிகளில் இறைபிம்பம் ஒளியாகவும், உருவாகவும் காணக்கூடியதாக அமைந்திருக்கிறது. அதேபோல் எம்பெருமான் ஞானலிங் கேஸ்வரப் பெருமான் திருப்பொன் னூஞ்சல் ஆடும்போது காணொளியில் தனது திருக்கண்களைத் திறந்திருப்பது தமிழ் வழிபாட்டிற்குத் தாமே திருக் கயிலை விட்டிறங்கி, திருத்தொண்டர் கூட்டத்தைத் தேடிவந்துள்ளார் என்பதன் சாட்சியாகும்.





அருள்ஞானமிகு ஞானாம்பிகை உட னுறை ஞானலிங்கேஸ்வரர் ஆலயத் தினை 2007 முதல் பேர்ண் மாநிலத்தில் அவனருளாற் பரிபாலித்துவரும் மன்ற மாகிய சைவநெறிக்கூடம், 1994இல் ஈழத்து இள வயதினரால் தமிழ் மக்களது மார்க்கமாகிய சைவத்தினை அறிந்து; புலம்பெயர் தமிழ் மக்களது சமய ஐயத் தினையும், வெளிநாட்டவர்களுக்கு எமது சமய, இனப்பண்பாட்டினைச் சரியான உதாரணத்துடன் அகம் - புறம் விளக்க நிறுவப்பட்டதே சைவத்தமிழ் மன்றமாகும். எமதுதேடலின் உந்துதல் எம்மை இமயம் முதல் குமரி தாண்டி, ஈழத்தின் வாசல்வரை தேட வைத்தது. இதன்போது ஔவைப்பிராட்டியின் மொழிபோல் எமது மார்க்கம் சைவமும், தாய்மொழி தமிழும் எப்படி முயன்று உசாவினாலும்; கையளவுமட்டுமே எழுத்திலும் சொல்லிலும் வெளிக்கொணரக் கூடியதாக இருக்கிறது. கற்கக் கடலளவு இருப்பினும், கற்கக்கூடியது கையளவாகவே காலம் அமைந்துள்ளது என்ற உண்மையினை எமது தேடல் எமக்கு உணர்த்தி நிற்கிறது.



ஆலயம் எனும் ஊடகத்தால் எமது நோக்கத்திற்கேற்பப் புலம்பெயர் சைவத்தமிழ்ச் சமூகத்திற்கு எமது சேவையினை ஆற்றிவருகின்றோம். ஆன்மிக அமைப்புக்கள் தமது இனத்திற்கான பணியினையும், அதேபோல் மக்களின் அகத்தில் மற்றும் புறத்தில் உள்ள இடர்களைப்போக்கும் கருவியாகவும்; அதேபோற் கடின நிலை யினைத் தளர்த்தி, பக்தர்களை ஆற்றுப்படுத்தும் உளச்சேவையும் புரியவேண்டும் என்பதே எமது அவா ஆகும். குருவருள் திருவருள் துணைநிற்க நாம் மேற்காணும் சிவசங்கல்பத்தினை ஏற்று; சரியா, கிரியா தொண்டாற்றி நிற்கின்றோம். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்


உலக சைவப் பேரவை
WORLD SAIVA COUNCIL




*President: Sivaththiru Yogananda Adikal, France; Tel: 331 39 80 99 48*
*Secretary: Dr. Shan A. Shanmugavadivel, Canada; Tel: 416-293-0966 / 416-266-5161*


# வாழ்த்துரை

சுவிஸ் நாட்டில் வாழும் தமிழ் இளைஞர் ஐவர் சைவம் தமிழ் குறித்துப் பதினைந்து ஆண்டுகளின்முன் சிந்திக்கத் தொடங்கினர். சிறு வயதினரான இந்த இளைஞர்களின் சீரிய சிந்தனையும் செயலும் இன்று சைவநெறிக்கூடமாக வளர்ந்து பரந்து நிற்கிறது.

சைவநெறிக்கூடம் நான்கு முக்கிய கூறுகளைக் கொண்டு அமைந்துள்ளது. ஞானாம்பிகை உடனுறை ஞானலிங்கேஸ்வரர் திருக்கோயில், திருத்தொண்டர் சபை, சிவஞானச் சித்தர் பீடம், சிவப்பணி நிலையம் ஆகியவை இவை.

சைவத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவன் ஞானமே வடிவானவன். அவனின் சக்தியாகிய அருளே அம்பிகை. அவள் ஞானாம்பிகை. அவனைப்போல் அவளும் ஞானவடிவினள். 'எத்திறம் நின்றான் ஈசன், அத்திறம் அவளும் நிற்பாள்' என்று சிவஞானசித்தியார் என்னும் சித்தாந்த நூல் விளக்கும் இவற்றை உணர்த்துவதாகவும் ஞானாம்பிகை உடனுறை ஞானலிங்கேஸ்வரர் கோயில் அமைந்துள்ளது.

தன்னை நாம் உணரக்கூடியதாக ஈசன் முதலிற்கொண்ட வடிவம் சதாசிவ வடிவம். இதனைக் குறிப்பது சிவலிங்கம். ஞானலிங்கேஸ்வரர் கோயிலுக்கு இறையருளாலும் குருவருளாலும் ஈழத்திலிருந்து ஒரு ஸ்படிகலிங்கம் கிடைத்திருக்கிறது. இது ஆத்மிகஞானி உமாசங்கர் அவர்கள் தனது குருவருளால் பெற்றதெனக் கூறப்படுகிறது. இத்தகைய சிறப்புமிக்க ஞானலிங்கேஸ்வரர் திருக்கோயில் சுவிஸ் நாட்டில் அமைவது அங்குள்ளவர் முன்செய்த புண்ணியப் பலன் என்றே கருதவேண்டும்.

சிவனடியார்கள் திருத்தொண்டர்கள் எனப்படுவர். அவர்களின் பெருமையைக் கூறும் பெரியபுராணத்துக்குச் சேக்கிழார் இட்டபெயர் 'திருத்தொண்டர் புராணம்' என்பதாகும். இத் தொண்டர்கள் எதிலும் எவரிலும் இறைவனைக் காண்பவர்கள். மக்கள் பணியை அவர்கள் இறை பணியாகச் செய்வார்கள். சைவம் காட்டும் இப்பணியை முன்னெடுத்துச் செயல் புரியும் நோக்கில் அமைந்தது திருத்தொண்டர் சபை. இவற்றைத் தவிர, சிவஞானச் சித்தர் பீடமும், சிவப்பணி நிலையமும் சைவப்பணிகள் ஆற்றும் அமைப்புக்களாக உள்ளன.

சைவமக்கள் இன்று தமது பெருமைமிகு சமயத்தையும், அதன் அறிவுசார் தத்துவத்தையும், பாரம்பரியத்தையும், வழிபாட்டு முறைகளையும் அறியாமல் வாழ்கின்றனர். சைவத்துக்கு மாறான கொள்கைகளும் வழிபாடுகளும் உள் நுழைகின்றன. இந்த அவலநிலை மாறி சிவநெறி தழைக்க இன்று சுவிஸ் நாட்டில் அமைந்துள்ள சைவநெறிக்கூடம் பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை.

ஞானலிங்கேஸ்வரர் திருக்கோயிலும் இராஜகோபுரமும் சிறப்புறஅமைவதற்கு அன்பர்கள் தம்மாலியன்ற உதவியை வழங்குவார்களாக. சிவத்தமிழ்ச் செல்வங்களான இளைஞர்களின் தன்னலமற்ற உயர்பணி சீருடன் வளர சிவபெருமான் திருவடிகளைப் பண்ணிந்து வாழ்த்துகிறோம்.

*"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்."*

*அன்பன்*
சித்தாந்தரத்தினம்,
**கலாநிதி க. கணேசலிங்கம்**
ஆதீனப்புலவர்,
இலண்டன் மெய்கண்டார் ஆதீனம்.

*ஆஸ்திரேலியா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# திருத்தொண்டர் சபை

தொண்டர்தம் பெருமை சொல்லிற் சொல்லமுடியாதது. சைவநெறிக்கூடத்தின் அனைத்துச் செயற்பாடுகளும் குருவருள், திருவருள் கைகூடி அமைந்த இத்தொண்டர்களின் உடல் - உள உழைப்பாற் சாத்தியமானதே ஆகும். ஆலயத்தில் நடைபெறும் விழாக்கள் முதல், சைவநெறிக்கூடத்தால் முன்னெடுக்கப்படும் அனைத்துச் செயற்பாடுகளும் தொண்டர்களின் செயலாக அமைந்தபோது; ஞானலிங்கேஸ்வரர் ஆலயத் தொண்டர்கள் "இதற்கு ஓர் அமைப்பு நிறுவுவதா?" - என விவாதித்திருந்தனர்.



இக்காலத்தில் ஞானலிங்கேஸ்வரர் ஆலயக்குருவின் சொப்பனத்தில் தோன்றிய பெருமான், பங்குனி உத்தர நாளில் (2010)இல் திருத்தொண்டர் சபையினை அமைக்குமாறு பணித்தருளினார். பெருமான் சொப்பனத்தில் உதிர்த்த வாக்கினைச் சிரம்மேற்கொண்டு திருத்தொண்டர் சபை அமைக்கப்பட்டது.

திருத்தொண்டர்சபையின் தூர இலக்கு ஆன்மிகத் தொண்டர்களை ஒருங்கிணைத்து மக்களுக்குச் சேவை செய்வதாகும். தற்போது ஆலய நிகழ்வுகள் அனைத்தையும் செப்பனே திறம்பட நடாத்துவது, சரியா, கிரியா, யோகங்களை ஆலயத்திற் செய்வது, திருத்தொண்டர் சபையின் செயலாக அமைந்துள்ளது.

சமயம் பொதுமக்களின் வாழ்விற் பங்கெடுக்கவேண்டும். வெறுமனே ஒருநாள் நிகழ்வில்மட்டும் சமயம் வாழாது. வாழ்வை வழிநடத்தும் நெறியாகச் சமயம் அமையவேண்டும். இதற்குப் பலபணிகள் இந்துக்கள் மத்தியில் உள்ளன. எமது சமயம் வழிகாட்டும் பெரும்பணிகளை ஏற்று; மக்களுக்குச் சமயத்தின் பங்காகத் தொண்டாற்றத் 'திருத்தொண்டர் சபை' அமைக்கப்பட்டது.

அங்குரார்ப்பணநிகழ்விற்கு அழைப்புவிடுக்க, சில தொண்டர்களுக்கு ஆலயக்குரு தொலைபேசி அழைப்பு விடுத்தபோது அவர்கள், வேலை இடங்களிற் பங்குனி உத்தரநாளிற்கு விடுப்புப்பெற்றிருந்தனர். ஏனெனில், எம்பெருமான் அவர்கள் சொப்பனத்திலும் தோன்றி, அத்திருநாளிற் பெரும் கப்பல் ஒன்று புறப்படுகின்றது, விரைந்துவந்து பயணத்தில் இணையுமாறு கேட்டிருந்தார்.

மீண்டும் மீண்டும் குருவருளும், திருவருளுமே எமக்கு வழிகாட்டும் கருவிகள் என்பதைப் பலசெயல்கள் உறுதிப்படுத்துகின்றன.

உலகின் எந்தமுனையில் இருப்பினும் திருத்தொண்டர் சபையில் இணைந்து சிவதொண்டாற்ற அனைவரையும் பெருமான் பெயரால் அழைக்கின்றோம். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

# சைவநெறிக்கூடம்


அருள்ஞானமிகு

# ஞானலிங்கேஸ்வரர் ஆலயம்

LAUBEGGSTRASSE. 21, 3006 BERN, SWITZERLAND
Tel: 078 645 30 42 / 079 275 68 62 / 076 437 48 96/ 031 302 09 56
www.saivanerikoodam.ch info@saivanerikoodam.ch facebook.com/saivanerikoodam

## சிவஞான சித்தர்பீடம்
## SHIVAGNANA SITHARPEEDAM
MIT SHIVA-BEWUSSTSEIN LEBEN

சித்தர்களில் முதற் சித்தன் சிவபெருமான் ஆவார்.
இவரே எமது குருவாம், தலைவனுமாம்,
தெய்வமுமாம், உறவுமாம்.
உலகில் அனைத்துச் சமயங்களுக்கும்
நிறுவுநர்கள் இருக்கிறார்கள். இந்துசமயத்தில் மட்டும்
இப்படி எந்தச் சமய நிறுவுநர்களும் இல்லை.
ஆனால், எமது சமயத்தில் இருக்கும்
ஒவ்வொரு அருளாளர்களுக்கும் சமயம் அமைத்தால்
உலகில் அதிக சமயத்தைப் படைத்த சமயம்
இந்துசமயமாகவே இருக்கும்.


திருமூலர்



**திருமந்திரம்**

திருச்சிற்றம்பலம்

யாவர்க்கு மாம்இறை வர்க்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே.

திருச்சிற்றம்பலம்

இறைவனின் நேரடி அருளினையும், தொடர்பினையும், அறிவதனையும் பெற்ற ஞானியர்களே சித்தர்களாவர். பாரதத்திலும், ஈழத்திலும் பல சித்த புருஷர்கள் எமது சமயத்தினைச் செழுமைப்படுத்தி உள்ளார்கள்; வருகிறார்கள்.

எமது சமயத்தேடலிற் குருவருளாலும், திருவருளாலும்; சித்தர்கள் அருட்பேறும் - தொடர்பும் நாம் கிடைக்கப்பெற்றோம். பௌர்ணமிதோறும் ஞானலிங்கேஸ்வரப் பெருமானிற்குப் பால் அபிடேகம் செய்யுமாறு அன்று சிவலிங்கத்தினை எமக்கு உகந்தளித்த சத்குரு உமாசங்கர் எம்மைக் கேட்டுக்கொண்டபோது; சுவிஸ் நாட்டில் ஒவ்வொரு பௌர்ணமிதோறும் எப்படிப் பால் அபிடேகம் செய்வது எனும் கேள்வி எம்மில் இருந்தது.

ஆனால், ஞானலிங்கேஸ்வரர் ஆலயம் அமையப்பெற்ற குறுகியகாலத்தில் சூரிச் மாநிலத்தில்; சேவையாக பரிகாரநிவர்த்தி ஆலோசனை வழங்கிவரும் அருட்திரு. சிவயோகநாதர் (யோகன் சாத்திரியார் ஐயா) அவர்கள் ஆலயத்திருப்பணியில் இணைந்துகொண்டதுடன், பௌர்ணமிதோறும் பல நூற்றுக்கணக்கானோர் பெருமானிற்குப் பால் அபிடேகம் செய்யும் வாய்ப்பினை ஏற்படுத்தினர். (இதுவும் ஓர் இறைவனின் தேவையே)

சிவாகமமுறையில் ஆலயம் அமைந்திருக்க, ஆலயத்திற் பௌர்ணமிதோறும் சித்தர் வழிபாடு மேலும் சிறப்பாக அமையப்பெற்றபோது; இன, மத, மொழிபேதங்களைத்தாண்டி 2011இல் சிவஞானசித்தர் பீடம் நிறுவப்பட்டது.

பலநாட்டு அன்பர்களும் இப்பீடத்தில் இணைந்திருப்பதுடன், பௌர்ணமிதோறும் பலர் வாழ்விற் சுகானந்தசிவானந்தம் அடைந்து சிறந்து விளங்குகின்றனர். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

அருள்ஞானமிகு

# ஞானலிங்கேஸ்வரர் ஆலயம்

LAUBEGGSTRASSE. 21, 3006 BERN, SWITZERLAND
Tel: 078 645 30 42 / 079 275 68 62 / 076 437 48 96/ 031 302 09 56
www.saivanerikoodam.ch info@saivanerikoodam.ch facebook.com/saivanerikoodam

## செந்தமிழ் திருமறை வழிபாடு



தமிழ் சைவத் திருக்கோயில்களில் நித்தியவழிபாடுகள், தமிழில் வழிபாடு செய்வதற்கும், போற்றுதல் சொல்வதற்குமான உன்னதமான உலகரங்கில் பிரகடனமொன்றை, உலகமெல்லாம் முழங்கும் உன்னத பண்டைக்கால பலம்மிக்க செவ்வேள் வேலவன் முருகப்பெருமானைக் கடவுளாகக்கொண்ட பண்ணிசைப் பாவலரும், பல்மொழிகளும் தலைசாய்க்கும் செந்தமிழ் வேள்விச் சதுரர் மு.பெ.சக்திவேல் முருகனார் அவர்கள் தலைமையில், செந்தமிழே சிரம்தாழ்த்தி, செந்தமிழ் மறைபோற்றும் உன்னத உலகப் பிரகடனமானது "என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்று தன் படைப்பின் நோக்கத்தையும் பிறப்பின் காரணத்தையும் பாரறியப் பிரகடனப்படுத்திய சைவத்தின் மூலநூல்களில் ஒன்றான திருமந்திரத்தில் திருமூலரால் குறிப்பிடப்பட்டதைப் போன்றே இம் மீளமைப்புப் பிரகடனமானது நந்தன ஆண்டு ஆவணித்திங்கள் முப்பத்தோராம் நாள் (16-09-2012) ஞாயிற்றுக்கிழமை அபரபக்கப் பிரதமைத் திதியும், உத்தரத் திருநாளும், அமிர்தயோகமும் கூடிய பனிபடர்ந்த பளிங்குமலை; பார்போற்றும் பட்டணங்கள் படையெடுக்கும் சொர்க்கத்தின்சொர்க்கமாகச் சொக்கவைக்கும் சுவிஸ் என்ற நாட்டினிலே, பசி போக்கப் பால்மடிகள் பசுவாக அவதரித்த பேர்ண்மாநகரில், மனம்நொந்து கைகூப்பி ஆறுதல்தனைத்தேடி மண்டியிடும் உலகமக்களின் கண் சலிக்காமல் சேவையாற்றும் சைவநெறிக்கூடம்தனில் ஞானாம்பிகை உடனுறையும் ஞானலிங்கப்பெருமானினதும், சித்தனுக்குச்சித்தனாம்; சிதம்பரத்தின் தலைவனாம்; சடைமுடிச்சடையனாம் தேவசங்கரன் சிவனவன் படையெடுப்பாம் சிவஞானசித்தர்களில் சிரம்தாங்கும் சித்தர் கூட்டத்தினரின் சிரமேற்றஆசியுடன் இந்தப்பிரகடனத்தை உலகரங்கின் சிரசினிலே முடியாக மகுடமாக்குகின்றோம்.

இந்நிகழ்விற்கு உலகறிந்த ஞானியரும், புலமைபெற்றப் புலவர்களும், தெளிந்த அறிவுகொண்ட திடமான புத்திஜீவிகளும், சமயகுரவர்களைப் போற்றும் சைவஆர்வலஅன்பர்களும், எம்பெருமானை சிரம்மேற் கைகூப்பிச் சிந்தனையை ஒன்றாக்கி உள்ளடக்கும் அடியார் கூட்டங்களையும், உலகெல்லாம் இப்புகழை உறுதிபடக்கூறுகின்ற ஊடக அன்பர்களினதும் அன்புக்கரங்களின் வியர்வைத்துளிகளை வேண்டிநிற்கின்றோம்.

இந்நிகழ்வு எடுத்துரைக்கவல்ல, எடுத்துரைக்கப்போகும் முக்கியத்துவத்தை மனதிற்கொண்டு, உங்கள் வியர்வைத் துளிகளையும் பிசைந்து உழைப்பாக்கி உலகரங்கிற் கொண்டுவந்து, இப்புகழை உலகம் வாயில்கைவைத்துப் புருவங்களை வில்லாக்கி, இந்தப்பரலோகவாசனையைச் சுவாசிக்கப் பணிபுரிந்து ஐயனின் அனைத்துக் கடாட்சங்களையும் பெற்று நீடூழி வாழ்வாங்கு வாழ்கவே. ■

**அருட்திரு சிவயோகர்**
(சாத்திரியார் ஐயா அவர்கள்)
சிவஞான சித்தர்பீடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவநெறிக்கூடம்
அருள்ஞானமிகு
ஞானலிங்கேஸ்வரர் ஆலயம்
LAUBEGGSTRASSE. 21, 3006 BERN, SWITZERLAND
Tel: 078 645 30 42 / 079 275 68 62 / 076 437 48 96/ 031 302 09 56
www.saivanerikoodam.ch info@saivanerikoodam.ch facebook.com/saivanerikoodam




# சுவிட்சர்லாந்தில் எழுகிறது சிவன் கோயில்



"திருப்போரூர் முருகன்சிலை இந்த இடத்தில் உள்ளது. அதை எடுத்துக் கோயில் எழுப்புவாயாக!" என்று திருப்போரூர் சிதம்பரப்பிள்ளை சுவாமிகள் கனவில் முருகன் சுட்டிக்காட்டியபின் அங்கே முருகன் திருக்கோயில் எழுந்தது என்பது வரலாறு. "நின்றவூரில் பூசலான் என்பான் எமக்கு ஒரு கோயில் எடுப்பித்துள்ளான்" என்று இராஜசிம்மன் கனவில் இறைவன் சுட்டிக்காட்ட அங்கே எழுந்தது சிவன் கோயில் என்பதும் பெரியபுராணம் கூறும் வரலாறு. இவ்வாறு இன்னும் பலப்பல கோயில் வரலாறுகள் நம்மிடையே உண்டு. ஆனால் ஒரு சிவன்கோயில் சுவிட்சர்லாந்தில் இப்படி அன்பர்கள் கனவில் இறைவனால் சுட்டிக்காட்டப்பட்டு உருவாவது தற்கால அதிசயமல்லவா?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் வரலாறு இதுதான் : சுவிஸ் நாட்டில் 1994-1995ஆம் ஆண்டுகளுக் கிடையில் 15 முதல் 21 வயதிற்குட்பட்ட இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து வந்து வாழ்ந்த ஐவர் தற்செயலாகக் கூடியபோது அவர்கள் சிறிய அளவில் ஒரு மன்றத்தினை "சைவநெறிக்கூடம்" என்று அமைத்தனர்.

இந்தச் சைவநெறிக்கூடத்து அன்பர்க்கு இலங்கை மௌனாசிரமத்தைச் சேர்ந்த சத்குரு உமாசங்கர் அவர்கள் ஒரு ஸ்படிகலிங்கத்தை அளித்தார். சைவநெறிக்கூடத்து அன்பர்கள் அந்தப் ஸ்படிகலிங்கத்தையும், உடனாய ஓர் அம்பிகை படிமத்தையும் அமைத்து "அருள்மிகு ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கேஸ்வரர் ஆலயம்" என்று ஒரு சிறிய ஆலயத்தைச் சுவிஸ் தலைநகரிலுள்ள பேர்ண் மாநிலத்தில் அமைத்து வழிபடத் தொடங்கியுள்ளனர்.



அதன்பின் அங்கே வளர்ச்சிகள் படுவேகத்தை அடைந்துள்ளன. அங்கே வழிபாடுகளைத் தமிழால், திருமுறைகளால் அன்பர்கள் அனைவரும் வேறுபாடில்லாது ஆற்றி வந்துள்ளனர். அவ்வழிபாடுகளிற் பல அதிசயங்கள் நடந்துள்ளன. விழாக் காலங்களில் நடைபெற்ற வழிபாடு களிற் பதிவு செய்யப்பட்ட காட்சிகளில் ஒளிப்பிழம்பும், ஞானலிங்கேஸ்வரப் பெருமான் கண்திறந்து பார்ப்பதுபோலவும் பதிவாகி உள்ளன. உடன் அவ்வாலய வளர்ச்சியும் விமான வேகத்தை அடைந்துள்ளது.







ஆலயக்குருக்களின் கனவில் ஒருமுறை தோன்றி ஞானலிங்கேஸ்வரர் பங்குனிஉத்தர நாளில் (2010) திருத்தொண்டர் சபை ஒன்றை உருவாக்குமாறு பணித்துள்ளார். அப்படியே செய்யப்பட்டது.

அங்கே நடைபெற்ற அங்குரார்ப்பண விழா ஒன்றிற்கு அன்பர்களுக்கு இறைவனே கனவிற் சென்று அழைப்பு விடுத்திருக்கிறார். அழைப்பு இப்படி அமைந்ததாம்: "பெரும் கப்பல் ஒன்று புறப்படுகிறது. விரைந்து வந்து பயணத்தில் இணைக!"

முதலிற் சைவநெறிக்கூடம், பிறகு ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கேஸ்வரனின் சிறிய ஆலயம், அதன் பிறகு ஆலய விரிவாக்கத்திற்காகத் திருத்தொண்டர் சபை என்று வளர்ச்சி சென்றுகொண்டே இருக்க; சுவிட்சர்லாந்தின் தலைநகரான பேர்ண் மாநிலத்தில் விரிவான அளவில் ஒரு சிவாலயம் உருவாகிக் கொண்டிருக்கிறது.

இதில் முக்கியமாகக் குறிப்பிடப்படவேண்டியது: இங்கு வழிபாடு தமிழிலேயே நடைபெறுகிறது. உலகெங்கிலுமுள்ள அன்பர்கள் இவ்வாலய வளர்ச்சிப் பணியில் தம்மால் ஆனவரை பங்கு கொள்வார்களாக! ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

# சைவநெறிக்கூடம்

## அருள்ஞானமிகு

# ஞானலிங்கேஸ்வரர் ஆலயம்

**LAUBEGGSTRASSE. 21, 3006 BERN, SWITZERLAND**
Tel: **078 645 30 42 / 079 275 68 62 / 076 437 48 96/ 031 302 09 56**
**www.saivanerikoodam.ch info@saivanerikoodam.ch facebook.com/saivanerikoodam**

# பூமிபூஜை மற்றும் அடிக்கல் நாட்டுவிழா






**எமது ஆலயத்தின் ஆலோசகர்கள்**
**அருட்திரு சிவயோகர் ஐயா அவர்களும், தவத்திரு தில்லையம்பலனார் ஐயா அவர்களும்**
**பூமி பூஜை மற்றும் அடிக்கல் நாட்டுவிழாவிற் சிறப்பிக்கும் சில காட்சிகள்...**

**சு**விஸ் தலைநகர் பேர்ண் மாநிலத்தில் BERN-/BÜMPLIZ/KÖNIZ வெளியேற்றமும், FREIBURG – BERN மின்னிரதமும், திறாம் தரிப்பிடமும் அருகாமையில் அமைந்திருக்க மேற்குக் கோட்டையின் வாசலாக ஐரோப்பாத்திடல் அமைக்கப்பட்டுள்ளது. இதன் சுவிஸ் அரச அங்கீகாரத்துடன் நடுநாயகமாக அருள்ஞானமிகு ஞானலிங்கேஸ்வரர் ஆலயம் அமையவிருக்கிறது. அப்பர்பெருமான் வாக்கிற்கமையச் சிவனடியார்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த தருணம் கனிந்துவந்திருக்கிறது. ஆம். பேர்ண் நகரம் இராஜகோபுரத்துடன் கோவில்கொண்ட நகரமாகப் பரிணமிக்கப்போகின்றது. சித்தர், ஞானியர், யோகியர் அருட்கருணையாற் சுவிஸ் தலைநகர் பேர்ண் நகரில் 2007இல் உதித்த ஞானாம்பிகை உடனுறை ஞானலிங்கேஸ்வரர் ஆலயச் சிவாலயத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா 27-06-2012 அன்று புதன்கிழமை 16.30 மணிமுதல் பேர்ண்நகர் மேற்கு அவுசர்கோலிக்கெனில் (Freiburgstrasse. 170, 3008 Bern) ஐரோப்பாத்திடலில் நடைபெறத் திருவருள் நிறைகொள்ளக் கைகூடி இரவு 21.30 மணிவரை நடந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிகழ்விற் சுவிஸ்நாட்டின் மத்திய, மாநில அரச பிரதிநிதிகள், மாநில முதல்வர், பேர்ண் நகரபிதா ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டிருந்தனர். இக்கட்டுமானப் பொறுப்பினை ஏற்றிருக்கும் சூரிச் மாநிலத்தில் அமைந்துள்ள கல்ரெர நிறுவனத்தின் முகாமைத்துவ இயக்குநர் குழுமத்திலிருந்து பல்ஸ் கல்ரெர் பங்கெடுத்திருந்தார். இத்திட்டம் நமக்கும் சவால் மிகுந்த திட்டம் என அவர் தனது உரையில் வர்ணித்தார். ஏழு சமயத்தவர்களை உள்ளடக்கிச் சர்வமதபீடம் ஒவ்வொரு சமயத்தினரும் தமது சுய உரிமையுடன், சுயநிதியில் தமது பகுதிக்குள் தாமே தமது வழிபாட்டுத்தலத்தினை அமைக்க; அதனை ஒருங்கிணைக்கும் பொறுப்பினைச் சர்வமதபீடத்தின் அறக்கட்டளை பொறுப்பேற்றிருக்கிறது. பேர்ண் நகரசபைத்தலைவர் திரு. அலெக்சாண்டெர் சேப்பெற, மாநில அமைச்சர் திரு. கனஸ்-யூர்க் கேசெர் ஆகியோரும் கலந்து பல்லினப்பண்பாடும்; இசைந்தவாழ்வும் எனும்பொருளிற் சிற்றுரைகள் ஆற்றியிருந்தனர். மேலும் நகரசபைத்தலைவர் 30 அல்லது 40 ஆண்டுகளுக்கு முன்னர் சுவிஸில் அமைந்திருந்த சமய அடையாள வரைபடம் இன்று பல்லினத்தவரும், சமயத்தவரும் வாழும் சூழலில் மாறியிருக்கிறது. இம்மாற்றத்திற்கேற்ப நாமும் மாறவேண்டும். அனைத்துச் சமயத்தவரும் தம் சமயத்தினை ஒழுக வாய்ப்பளிக்கப்படுவதோடு, ஒருவரைஒருவர் மதித்து நடக்க இத்தகைய அமைவிடம் தேவை. மாற்றத்தைக்கண்டு அஞ்சாது மாற்றத்தோடு இசைந்து நல்வழியில் வாழவேண்டும் எனக்கோரினார்.









மேலும், ஞானலிங்கேஸ்வரர் ஆலயக்குரு த. சசிக்குமார் தனது சிற்றுரையில் "சுவிஸ் அரச அங்கீகாரத்துடன் சர்வமதபீடத்தின் பங்காளராகச் சிவாலயம் அமையவிருக்கிறது என்பதன் பொருள் சுவிஸ் அரசோ அல்லது சர்வமதபீடமோ நிதிஉதவியினை ஞானலிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு அளிக்கும் என்பதல்ல. கோவில் நிரந்தரமாக இராஜகோபுரத்துடன் அமையச் சட்டரீதியான அனைத்து அனுமதிகளும் அளிக்கப்பட்டுள்ளன என்பதாகும். சுவிஸ்நாட்டுச் சட்டத்திற்கமையச் சமய அமைப்புக்களுக்குச் சுவிஸ் நிதி வழங்காது. அதேபோல் சர்வமதபீடமும் நிதிவழங்காது" ஞானலிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடத்திற் சிவாலயம் அமைப்பதற்கான அனைத்துத் திருப்பணிகளையும் சைவத்தமிழ்மக்களே முன்னின்று நடத்தவேண்டும்எனக் கோரிக்கை வைத்திருந்தார். பலவருடங்களாக உருவம்பெற்ற திட்டம் கடந்த புதன்கிழமை பல நூற்றுக்கணக்கான சைவத்தமிழ் புண்ணியர்கள் அனைவரும் நேரில்வந்து, நவதானியம் விதைத்து, கோமாதா பூசையிலும், அஸ்வ ஹோம வழிபாட்டிலும், பூமிவழிபாட்டிலும் கலந்து தம்திருக்கரத்தாற் கல் எடுத்துவைத்து நிறைவுசெய்திருந்தனர். இந்நிகழ்விற் சுவிஸின் பல ஆலயக் குருமார்கள், நிர்வாகிகள், பொறுப்பாளர்கள், தொண்டர்கள் கலந்து சிறப்பித்திருந்தனர். செந்தமிழ் திருமறையில் அனைத்துக் கிரியைகளும் இடம்பெற்றிருந்தன. அதிதிகளாகக் கலந்துகொண்ட அனைத்துக் குருமார்களும்; நிறைந்த ஒத்துழைப்பும், ஆசியும் வழங்கி; அவர்களும் வழிபாட்டில் திருவருள் நிறைபொலியப் பங்கெடுத்திருந்தனர்.

2014ஆம் ஆண்டு இத்திட்டம் நிறைவுற்று இராஜகோபுரத்துடன் தமிழில் வழிபாடு நடைபெறும் செந்தமிழ் சிவாலயம் தமிழ்ப்பண்பாட்டுக்கலையுடன் சுவிஸ் தலைநகரில் மிளிரப்போவது உறுதியாகி உள்ளது. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

சைவநெறிக்கூடம்

அருள்ஞானமிகு

ஞானலிங்கேஸ்வரர் ஆலயம்

LAUBEGGSTRASSE. 21, 3006 BERN, SWITZERLAND

Tel: 078 645 30 42 / 079 275 68 62 / 076 437 48 96/ 031 302 09 56

www.saivanerikoodam.ch info@saivanerikoodam.ch facebook.com/saivanerikoodam



# திருநெறிய தமிழ் காட்டும் திருநின்ற செம்மை நெறி

செல்லப்பா சுவாமிகள் தேவாரத்திருமுறையை மெய்யன்போடு ஓதி வந்தனர். (அவர் படித்த தேவாரப் புத்தகத்தை அவர்தம் சகோதரியாரின் வழியினர் அண்மைக்காலம்வரை கவனமாகப் பேணி வந்தனர். இடப் பெயர்வின்போது அதனை அவர்கள் இழக்கநேரிட்டது). ரமணமகரிஷிகள் மெய்யுணர்தற்கு முன்படித்த ஒரேயொரு திருநூல் பெரியபுராணமாயமைந்தது போன்று செல்லப்பாசுவாமிகள் தம்மை மெய்ப்பொருள் அதிட்டித்து நிற்பதற்கு முன் ஓதிய ஒரேயொரு திருநூல் இத்தமிழ் வேதமேயாம்.

யோகசுவாமிகள் கொழும்புத்துறை ஆச்சிரமத்தில் அரிதாகச் சேமித்து வைத்திருந்த நூல்களில் திருமுறைப் புத்தகங்களும் இருந்தன. அவரது திருமுன்னிலையிலே நாளும் சிவபுராணம் ஓதப்பட்டுவந்தது என்பது பலரும் அறிந்ததே. அவரது பணிப்பின்படி நாகலிங்கப் பரதேசியார் என்னும் ஓதுவார் சம்பந்தப்பிள்ளையார் 'இடரினும் தளரினும்' எனும் பதிகம் ஓதித் தந்தையாரது வேள்விச் சடங்கிற்கு வேண்டும் பொன்முடிப்புப் பெற்றதுபோலத் தாமும் ஓதித் தமது புதல்வியின் திருமணச்சடங்கிற்கு வேண்டும் பொருள்பெற்றமையை அறிவார்அறிவர். இது திருமுறையின் அருள் மாட்சிக்குச் சுவாமிகள் காட்டிவைத்த ஓர் அற்புதச் சாட்சியாகும். நற்சிந்தனையிலே தேவாரப்பண்ணிலும், தாண்டக வடிவிலும், திருவாசகச்சாயலிலும் திருமந்திர அமைப்பிலும் பாடப்பெற்ற நல்லமுதப் பாடல்கள் பலவற்றை நாளும் ஓதி இன்புறும் சிவதொண்டர் சிலர் இன்றுமுள்ளனர். அவர் சிவதொண்டன் நிலையங்களிலே குறித்த வேளைகளில் தினைப்போதும் மறவாமல் தேவாரம், திருவாசகம் ஓதி வருதல் வேண்டும் என நியமஞ் செய்தார்.

சுவாமிகள் விதித்த சிவதொண்டன் நியமங்களைக் கண்டிப்பான ஒழுங்குமுறையுடன் கடைப்பிடித்துச் செம்மையான "சிவதொண்டன் மரபை" அமைத்துத்தந்த செல்லத்துரைசுவாமிகள், தாம் திருவடிக் கலப்புறுவதற்கு முந்திய நாளான பங்குனி உத்தரத் திருநாளிலே, சிவதொண்டன் நிலையத்துக்கெனப் புதிதாக வாங்கியிருந்த இல்லத்திற்குச் சென்று பார்வையிட்டு, இவ்வில்லத்திற்குத் தேவாரப்பாடசாலை எனப் பெயரிட்டுத் திருமுறைக்கல்வியை வளர்க்குமாறு பணித்தருளினார்கள் என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாம்.

சிவத்தொண்டன் வரன்முறை பற்றிய இச்சுருக்கக் குறிப்பு சிவதொண்டன் நெறி "திருநெறிய தமிழ் காட்டும் செந்நெறி" என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. நமது சமய குரவர்கள் காட்டிய இச்செந்நெறியே நம் முன்னோர் செழிப்புற்றுப் பொலிவுடன் வாழ்வதற்கும் காரணமாயிருந்தது. சைவத்திருமுறைகளைத் தொகுக்கும் பணிக்கு ஊக்கமூட்டிய அபய குலசேகரன் முதலாய மன்னரும், அதனைத் தொகுக்கும் பணியிலீடுபட்ட நம்பியாண்டார்நம்பி ஆதிய அருளாளர்களும் வாழ்ந்த காலத்தேதான் சோழப்பேரரசு உதயமாயிற்று. தஞ்சைப் பெரிய கோயிலிலே நாற்பத்தெட்டு ஓதுவார்களை நியமித்திருந்த இராசஇராசசோழன் ஆதிய பேரரசர்களும்; அரசவையிற் செல்வாக்குடன் விளங்கிய கருவூர்த்தேவர், அருள்மொழித்தேவர் ஆதிய திருமுறைவாணர்களும் திருத்தொண்டு புரிந்த காலத்திலேதான் அப்பேரரசு கடல்கடந்த நாடுகளிலும் செல்வாக்குடன் திகழ்ந்தது. இவ்வாறான செல்வாக்குடன் வாழும் காலத்திலே செல்வச் செருக்கினாலே செந்நெறியினின்றும் மாறிப் பொறிவழியே புகுந்தலைய நேரிடுதலும் ஓர் உடன்பிறந்தே கொல்லும் வியாதி போலும். சோழப்பேரரசு உச்சமுற்றிருந்தபோது இவ்வியாதியும் தோன்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வியாதி எது போன்றதெனில்; இன்று நாம் அல்லற் கடற்குள் வீழ்ந்து கிடப்பதற்கு ஏதுவாய் நமக்கு ஏற்பட்டிருக்கும் வியாதி போன்றதே. நாம் நாவலரும், அவர் வழியிலே திருவிளங்கதேசிகர் போன்றோரும், செல்லப்பாசுவாமிகள், யோகசுவாமிகள் ஆதிய சிவஞானியரும் காட்டிய செந்நெறியிற் சென்று இறைகளோடிசைந்த இன்பவாழ்வுடன் கல்வி, அரச உத்தியோகம், வணிகம், பொருட்செல்வம் என்பவற்றிலும் பொலிந்து விளங்கினோம். கூடவே பொருட் செல்வமோகம் தலையெடுப்பதாயிற்று. திருவிளங்கதேசிகர் ஆதியோர் சட்ட மேதைகளாயிருந்தபோதும்; சாத்திர - தோத்திரங்களை ஓதுவதையும், ஓதுவித்தலையுமே ஆத்மார்த்த நிறைவாகக் கொண்டிருந்தனர். செல்வச் செருக்குற்ற பிற் சந்ததியினரோ உண்மை நூற்கல்வியை மறந்து பொருட்செல்வத்தைப் பெருக்கும் கல்வியிலேயே கண்ணாயினர். சாத்திர தோத்திரங்களைப் பயிற்றும் பேராசிரியர்களும் நாத்திகம் பேசி நாத்தமும் பேறுவோராய் மாறினர். அருளாதாரத்தை மறந்து பொருளாதாரத்தைப் போற்றலாயினர். அருள் வழியினின்றும் மாறி மருள் வழியிலே சென்றனர். இகபரம் இரண்டும் நல்கும் அருளாதார அத்திவாரம் ஆட்டம் கண்டது. யோகசுவாமிகள் இந்த வியாதி பீடிப்பதைக் கண்டே

"செல்வச் செருக்கினால் தீ வினையை ஆற்றுவீர்
அல்லற் கடற்குள்ளே ஆழ்ந்திடுவீர்"

என்று எச்சரித்தார். அவ்வெச்சரிக்கையையும் பொருட்படுத்தாது நாம் பொருட்செல்வத்திலும், போகபோக்கியங்களிலும் கண்ணாயிருந்து; உண்மையான பலத்தைத் தரும் அருளாதார அடிப்படைப்பலத்தை இழந்து நிற்கிறோம். இவ்வாறே அன்றும் நிகழ்ந்தது. 'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்பதே தாரகமாயிற்று. "திசையையாயிரத்து நூற்றுவர்" 'நானா-தேசிகர்' என்னும் பெரிய வணிக கூட்டங்கள் உருவாயின. இவ்வணிகக் குழுக்கள் தென்கிழக்காசிய நாடுகள் மாத்திரமின்றிச் சீனா, யப்பான் ஆதிய தூரகிழக்கு நாடுகளுக்கும் சென்று வணிகம் செய்தனர். இன்று நம் போலிகள் கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்குச் சென்று போக போக்கிய வாழ்வு வாழ்வதிற் கொள்ளும் மோகத்திலும் குறைந்ததன்று அன்றைய வணிகக் குழுக்களின் மோகம். இத்தகைய மோகம் திருமுறை ஓதுதல், ஓதுவார்களை ஆதரித்தல், நாயன்மார்களுக்கு ஆலயம் நிறுவுதல், அவர் சரிதம் கேட்டல், அவரது சரித நிகழ்ச்சிகளைக் கல்லிலும் சொல்லிலும் வண்ணத்திலும் தீட்டி வைத்தல் ஆதிய அருட்பணிகளில் ஆர்வத்தைக் குறையச்செய்தது. நாற்பத்தெட்டு ஓதுவார்களையும், அவ்வோதுவார்களுக்கு வாத்தியங்கள் வாசிப்போரையும் நியமித்த நிலைமாறி வலதுகுறைந்த இரு ஓதுவார்களையும், அவர்களுக்கு வழிகாட்டுவோரையும் நியமிக்கும் நிலை ஏற்படலாயிற்று. சோழப்பேரரசு வீழ்ச்சியுற்ற காலத்தில் வெட்டப்பட்ட திருஆமத்தூர்க் கல்வெட்டு இவ்வீனத்தைப் பறைசாற்றி நிற்கின்றது. வரலாற்றாசிரியர்கள் சோழப்பேரரசின் எழுச்சி, வளர்ச்சி, வீழ்ச்சி ஆகிய மேற்றளத்துக் கோலத்தை வரன்முறைப்படி வடிவாகக் கூறுவர். திறவோர் அப்பேரரசாகிய புணையின் மிதப்புக்கு ஆதாரமான அருள் நீரோட்டத்தையே காண்கின்றனர். நீர்வழிப்படும் புணைபோலத் திருமுறை வழிப்படும் திருவும், கல்வியும் சீரும் தழைக்கும் வாழ்க்கை.

வாழ்முதற் பொருள் இறைவன். உலகுக்குயிராயுள்ளதும் அம்மெய்ப்பொருளே ஆதல்பற்றியே மாணிக்கவாசகசுவாமிகள் "போற்றி என் வாழ்முதலாகிய பொருளே" எனத் திருப்பள்ளி எழுச்சியைத் தொடங்கினார், ஒன்பதாம் பாட்டில் "உலகுக்கு உயிரானாய்" எனப்பாடினார். இத்திருப்பள்ளி எழுச்சி தனிமனிதனதும், உலகம் முழுவதினதும் சீவனாயுள்ள சிவனோடு உற்ற உண்மைச் சம்பந்தத்தைக் காட்டுவது. அச்சம்பந்தத்தை இறுக்கமாக்குவது "மானிடத்தியல்பின் வணங்குகின்றார் அணங்கின் மாணவாளர்" என வருவதுபோன்று பதிபக்தி பூண்ட குலமகளிர் தம் பதியிடம் கொள்வதுபோன்ற மெய்யன்பைச் சிவபெருமானிடம் கொள்ளவைப்பது. இத்தகைய "சிவசம்பந்தமே சைவம்" சைவம் எனப்படும் இச்சிவசம்பந்தம் சைவத் திருமுறையிலே அடுத்தடுத்துப் போதுமளவு சொல்லப்பெற்றிருக்கிறது. சிவசம்பந்தமுற்ற நாயன்மார்களால் சிவவாக்காகவே சொல்லப்பெற்றிருக்கிறது, மொழிக்குமொழி தித்திக்கும் வடித்தெடுத்த மொழிகளால் மொழியப் பெற்றிருக்கிறது, பண்சுமந்த பாடல்களிற் பாடப்பெற்றிருக்கிறது. இத்தகைய பாடல்களுமோ பன்னிரு திருமுறைக-ளிற் பல்லாயிரக் கணக்கினவாயுள்ளன. இவை மந்திர சக்தியுடையனவாயுள்ளன. ஆதலால் மெய்யன்போடு மனத்தினால் நினைந்து; வாயினாற் சொல்வோர்க்கு சிவசம்பந்தத்தைத் தரவல்லன. நாம் முன்னர் குறிப்பிட்ட இகபரசுகங்களுடன் வாழ்ந்த காலத்திலே திருமுறை ஓதல் நன்கு பரவியிருந்தது. அந்நாட்களிலே கிளிகளும் பதிகச்சொல் பயின்றன என்பர். திருமுறை ஓதுவதால் சமூகம் உயிர்த்துடிப்புடையதாய் விளங்குவதன் இரகசியம் இதுவே.

இதனை அனுபவபூர்வமாயுணர்ந்தோர் சிறிய தொகையினராயினும் இன்றுமுள்ளனர். அவர்கள் தாம் நெக்குளர்வம் மிகப் பெருகித் தினமும் திருமுறையை ஓதிவருவதுடன், தமக்குத் தெரிந்தவர்களையும் ஓதுமாறு தூண்டி வருகின்றனர். திருமுறைகளைத் தொகுதி தொகுதிகளாக வாங்கிவந்து படிப்போர்க்குக் கொடுத்து ஊக்குவிக்கின்றனர். அவ்வாறு ஊக்குவிப்போரும், ஊக்கமுறுவோரும் கூடித் திருமுறை முற்றோதலில் ஈடுபட்டு வருகின்றனர். யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் அவ்வாறு ஈடுபடும் குழுக்கள் பல உள. வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளிலும் அவ்வாறானோர் உள்ளனர். எனினும் "சிவனே சிவனே என்று ஓலமிடினும் உணராய் உணராய் காண்" என்றவாறு இதனை உணராது உறங்குவாரே பலராயுள்ளனர். ஆயினும் என்ன? இடரினும் தளரினும் சாவினும், வாழ்வினும் உண்ணினும் பசிப்பினும் திருமுறை ஓதும் திரு நின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட செம்மனப்புனிதர் என்றும் இருப்பர். அவர்கள் திருமுறை விளக்கை அணையாது எரியும்படி செய்துகொண்டே இருப்பர். அச்சோதி என்றும் நின்று நிலவும். அது நந்தா விளக்காய் நலம் செய்யும். ■

"தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்"
நன்றி

- சிவதொண்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

# சைவநெறிக்கூடம்

அருள்ஞானமிகு

# ஞானலிங்கேஸ்வரர் ஆலயம்

LAUBEGGSTRASSE. 21, 3006 BERN, SWITZERLAND
Tel: 078 645 30 42 / 079 275 68 62 / 076 437 48 96/ 031 302 09 56
www.saivanerikoodam.ch info@saivanerikoodam.ch facebook.com/saivanerikoodam



# சிவபணி நிலையம்

# "Im Namen Shiva"

## Hoffnung und Hilfe für Menschen in Not



புலம்பெயர் நாடுகளில் உள்ள இந்துசமய அமைப்புக்கள் வெறும் சமயச் சடங்குகளில் மட்டும் ஈடுபடாது, பல்வகை மக்கள் சேவையில் ஈடுபடவேண்டும் என்பது அவா ஆகும். எமது சமயத்திலே தோன்றிய நாயன்மார்களும், இறையருளாளர்களும் மக்களின் துன்பத்தைக்கண்டு தாம் வாடிநின்றனர். வாடிய பயிர்கண்டு வாடினார் வள்ளலார்.

நேரடியாகவும் மறைமுகமாகவும் மக்களின் இக-பர-சுக-துக்கங்களிற் பங்கெடுத்தனர் எமது சமயம்சார் முன்னோர்கள். இதன்வழியில் 'மக்கள் சேவையே மகேசன் சேவை' எனும் வாக்கிற்கமைய மக்களின் பசிப்பிணியினையும், அறிவுப் பசியினையும் ஈழத்திற் போக்கும் சேவையில் ஈடுபடும் அமைப்பாக நிறுவப்பட்டது.

தற்போது சுவிஸில் இயங்கிவரும் ஆலமரம் எனும் தொண்டமைப்பின் பங்காளராக இணைந்து வறிய மாணவர்களின் கல்விச் செலவினை ஏற்றுப் பணியாற்றுகின்றோம்.

மேலும், இப்பணியை விரிவுபடுத்தி உலகின் அனைத்துப் பகுதிகளிலும் சேவை செய்வதே சிவபணி நிலையத்தின் நோக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஐரோப்பாத்திடலில், சர்வமதபீடத்திற் பங்காளராக சுவிஸ் அரச அங்கீகாரத்துடனும், அடியார்களின் பொருளாதார உதவியுடனும் இராஜகோபுரத்துடன் கூடிய நிரந்தர சிவாலயம் அமைக்கும் திருப்பணி



எமது சத்குரு திருவருளாளர் திருநிறை உமாசங்கர் எமக்களித்த லிங்கநாதப்பெருமான்; இராவணனால் வழி படப்பட்ட சிவலிங்கமாகும். மேலும், சித்தர் பரம்பரை வழி பாட்டு முறைமையில் பௌர்ணமிதோறும் கூட்டுவழிபாடு நடாத்தி இப்பெருமானை வழிபடப் பணித்திருந்தார் சத்குரு.

1994இல் மன்றமாக உதித்த சைவநெறிக்கூடம் 2007ஆம் ஆண்டு சிவாலயம் அமைத்தபோது சைவ நெறிக்கூடத்தின் இலக்குகளை ஞானலிங்கேஸ்வரர் ஆலயத்தின் சேவையால் இறை சங்கல்பத்தில் அடைவது, அல்லது எமது இலக்குகள் தனிமனித எண்ணாங்களாயின் கைவிடுவது; என்ற கோட்பாட்டுடன் மேற்கொள்ளப்பட்டதாகும்.

எமது சுயமனித முயற்சிகளைத் தாண்டி; திருவருட் துணையும், திருவருளும் கைகூடி; சர்வமதபீடத்தின் அமைவிடத்தில் இந்துக்கள் சார்பாக ஞானலிங்கேஸ்வரர் ஆலயம் பரிணமித்தது. 2007இல் ஒரு கட்டடத்தில் வாடகைக்குத் தற்காலிகமாக அமைந்த ஆலயம் 27-06-2012 புதன்கிழமை மாலை 6.00 மணி தொடக்கம் 7.00 மணிவரையுள்ள பூர்வபக்க அட்டமித் திதி அத்தத் திருநாள் சித்தயோகம் கூடிய சுபநேரத்தில் இராஜகோபுரத்துடன் நிரந்தர சிவாலயமாக எழுந்தருள அடிக்கல் நாட்டுவிழா காணக் கைகூடியுள்ளது.

அரசுகள் சட்டமியற்றியும், தனிமனித முயல்வில் முயன்றும், முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட முடியாத தமிழ்மொழியில்; தமிழர்கள் 'தமிழ்மறையில்' இறைவனை வழிபடும் மார்க்கம் சுவிஸ் நாட்டின் தலைநகரில் இத்தால் இறை சங்கல்பத்தால் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாலயத் திருப்பணி

ஐரோப்பாத்திடல் திட்டம் சுவிஸ் அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதன் பொருள்: அத்திடல் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்பதாகும். மேலும் சிறப்பான செய்தி; நாம் இராஜகோபுரத்துடன் சிவாலயம் அமைக்கச் சட்ட ரீதியான அனைத்து அனுமதிகளும் வழங்கப் பட்டுள்ளன என்பதும் ஆகும். ஆனால், ஆலயம் அமைப்பதற்கு எமக்கு இடம் வழங்கும் சர்வ மதபீடம், எமக்கு எவ்வித நிதிப்பங்களிப்புக் களையும் வழங்கமாட்டாது. அதேபோல், சுவிஸ் அரசசட்டத்திற் சமய அமைப்புக்களுக்கு நிதி வழங்கத் தடையுள்ளது. ஆகவே, சுவிஸ் அரசும் நிதி உதவி வழங்கமாட்டாது. எமது இளந் தமிழ்ச் சமூகத்திற்கு வழிகாட்டவுள்ள ஆலயத்தினை நாமே நம் நிதியில் நிர்மாணிக்கவேண்டும்.

ஆட்டுவிக்கும் பெருமான், எமை ஆளுகின்ற பெருமான், 'என்னப்பனே என் ஐயனே' எனச் சிவ தொண்டர் தன்னை மறந்து இலயிக்கும் பெருமான். இது சொப்பனமல்ல; என் திருவிளை யாடலென அருள்ஞானமிகு ஞானலிங்கேஸ்வரர் பல அடியவர்களது சொப்பனத்தில் தோன்றி, எமது ஆலயத் திருப்பணியிற் பங்கெடுக்குமாறு பணித் தருளி வருகின்றார்.

சிவாலயத்திருப்பணியில் ஒரு துரும்பெடுத்து வைக்கும் அடியவற்கும் இணையிலிப் பெருவாழ்வு வழங்கும் எம்பெருமான் வேண்டுவதனைத்தும் அருள்வான்.

செந்தமிழ் சிவாலயத்திருப்பணியில் அனைத்து அடியவர்களும் இணைந்து செயலாற்றுமாறு எம்பெருமான் குரு வாக்கால் பணித்துள்ளார். இப்பெரும்பணி பக்தர்களின் கூட்டுமுயற்சியில் அமையவேண்டும் என்பதும் குரு வாக்காகும். நல்லோர் உவந்தளிக்கும் எத்தொகையும் பெருந் தொகையெனப் பெற்று, ஆலயத்தை ஆணவம் ஒழித்து அமைக்கத் திருவருளும் குருவருளும் எமைப் பணித்துள்ளன.

**உலகெலாம் பரந்துவாழும் ஆன்மிக அன்பர்களே,**
**தமிழின உணர்வாளர்களே**
**திருவருள் நோக்கினை நிறைவுசெய்யத் திருப்பணியில்**
**இருமைகள் அற்று அனைவரும் ஒருமையாய்**
**ஒருபொருளின்கீழ் பங்கெடுக்க வேண்டுகின்றோம்.** ■

## கணக்குரிமை

வங்கி /Bank: Credit Suisse, 3001 Bern
கணக்கு இல / Konto: 771 606 - 21
IBAN Nr: CH26 0483 5077 1606 2100 0
BC Nr: 4835
SWIFT-Adresse: CRESCHZZ80A
தபாற்கணக்கு இல:/
PostFinance:30-468890-2

# கோவில் அத்திவாரச் சந்தோஷ ஆசீர்வாதபிவாளி

முத்தமுடன் அத்திவாரம் கண்டநேர்மை
மூவுலகோர் தான் அறியச் சொல்வேன் அப்பா
நித்தமது நந்தன ஆனி மாதமப்பா
புவிதனில் பூரணம் என்றபுதன் நாள்தனில் புதன் ஓரையப்பா
நீடானஅத்தம் நாலாம் காலமும் சித்தயோகமும்
பக்தியுடன் தான் பதித்தபாதம்
பாரினிலே இறைவன் வீடும் குருவுமாச்சே
பாடுவேன் பலசந்தங்கள் சித்தாய்.










**Verein SAIVANERIKOODAM,**
Laubeggstr.21,
3006 Bern, Switzerland



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Harikanan (Pvt.) Ltd., Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org